# சாரதாவின் உள்ளம்

ஆஹா! எல்லாம் ஒரு கதையாகத்தான் நடக்கிறது! மானிடரின் மனப்போக்குத்தான் எத்தனை கூத்தடிக்கிறது? மனசுதான் என்ன ரசவாத விந்தை புரிகிறது?

அன்று ஒரு நாள் - சில வருஷங்களுக்கு முன்பு - சாரதா தன் பெண்ணுடன் வந்தாள். இந்தப் பட்டணத்திலே ஒரு வித்தியாலயத்திலே பெண்ணைச் சேர்த்துவிட்டுப் போகணுமென்று வடக்கேயிருந்து வந்திருந்தாள்.

பன்னிரண்டு வயசுச்சிறுமி, விசாலி. பவழவாயின் அழகும், பசுமையான உடல் வனப்பும் கண்டு நான் அவளை அப்பொழுதே, உடனேயே என் அன்புக்குரியவளாக்கிக் கொண்டுவிட்டேன்.

இந்தப் பெண்ணை, இத்தனை அழகு வாய்ந்த சிறுமியை, தங்கக் கட்டடத்திலே வைரம் போலே சோபை குலுங்கும் பெண்ணை, அவள் வித்தியாலயத்தில் சேர்த்துவிட்டுப் போகப்போகிறாளே? இவளைப் பிரிந்திருக்கத் துணிந்து வந்திருக்கிறாளே? விசாலியைப் பார்க்கப் பார்க்க சாரதா மேலே அதிருப்தி உண்டாயிற்று எனக்கு. அந்தப் பெண்ணைப் பார்த்தாலும் பரிதாபமாயிருந்தது.

பல காலம் கழித்துச் சந்தித்த சாரதாவும் நானும் - பால்ய சிநேகிதைகள் - நாங்கள் இருவரும் அளவளாவிப் பூரித்தது கொஞ்ச நேரந்தான். அன்புத் தர்க்கம்தான் நேரம் நீடித்தது.

"ஏன், சாரதா! அவளைக் கட்டாயம் சேர்க்கத்தான் போகிறாயா?" என்று கேட்டேன்.

"ஆம்! சேர்க்கத்தான் வேணும்! அங்கே நம் படிப்பு இல்லை. தமிழ்ப் பண்பு வராது! தனியாக இருக்கப் பழகினால், தன் பொறுப்பறிந்து வளர்ந்தால் நல்லது என்றுதான், இவளைப் பிரிந்திருக்க இவள் அப்பாவே ஒப்பினார்!" என்றாள் சாரதா.

"போகிறது, என்னிடம் விட்டு வையேன்!" என்றேன். உஹூம். அவள் இசையவில்லை உருவத்தைப் பிரதிபலித்தாலும், ஒன்றிவிடாத கண்ணாடிபோல அவள் பேச்சு இருந்தது. நான் எவ்வளவோ சொன்னேன். பெண்களை எப்படியும் பிரிய வேண்டிய காலமும் உண்டே! இப்பொழுதே பிடித்து ஏன் பிரியவேண்டும்? 'அப்புறம் இருக்கவே இருக்கே!' என்று நம்மவர் கூறும் வழக்கப்படி, பெண்களைப் போர்த்தி வளர்க்கும் இந்த நியாயத்தையொட்டி, நான் உபதேசம் செய்தேன். சாரதா சொன்ன பதில்தான் என்னை வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டது. "கமலா! முக்கியமாக இந்தக் காரணமேதான் இந்த ஏற்பாடு செய்யத் தூண்டித்து! அது தெரியுமா? நான் சில குஜராத்தியர் வீட்டில் பார்த்திருக்கேன்! பெண் கொஞ்சம் பெரியவளாகிவிட்டால் ஒரு வேளைச் சமையல் கட்டாயம் அவள்தான் செய்தாகணும்! அது அவளுடைய பிற்கால மனப்போக்குக்கு முற்பயிற்சி! நம்மவர்கள் போர்த்திப் போர்த்தி வளர்த்தால், அப்புறம் அவள் சிரமப்படும்பொழுது 'முந்தி எப்படி இருந்தேன்' என்ற கேள்வி எழுகிறது பெண்களின் மனதிலே! அதனால்தான் விசாலியை இப்பொழுதே பிடித்து பிரித்து வைத்துப் பழக்குவதற்கு எங்கள் ஏற்பாடு!" என்றாள் சாரதா. நான் என்ன சொல்லுவேன்?

"பின் என்னடியம்மா! சப்கலெக்டர் மனைவி நீ. நீயே இப்படி எல்லாம் சொன்னால் நான் என்ன சொல்ல?" என்றேன். ஆம்! நல்லதுதான், அவள் எண்ணம். பணக்காரியாயிருந்தாலும் அவள் மனப்போக்கு இப்படி இருப்பதை மெச்சத்தான் வேண்டும். செல்வ புதல்வியை, அருமை பெருமையாய்ப் பாராட்டி வளர்த்த பெண்ணை, இன்னமும் அப்படியே சீராட வேண்டிய மகளை, வித்தியாலயத்திலே சேர்த்துவிட்டு, தூரதேசத்திலிருந்து பணம் அனுப்பிக்கொண்டு, படிக்கவைக்க எத்தனை வைராக்கியம் இருக்க வேண்டும் அவளுக்கும் அவள் கணவருக்கும்?

கடைசியில் விசாலியை வித்தியாலயத்திலே சேர்த்துவிட்டுத்தான் போனாள் சாரதா. என்னிடம் விட்டு வைக்காவிட்டாலும் அவளை அடிக்கடி பார்த்துவிட்டு வரவும், எப்பொழுதாவது என்னிடம் வரவழைத்துக் கொள்ளவும் அனுமதி கொடுத்திருந்தாள் அவள்.

நிலா வீசும் ஒளி முகத்தினளாய் வித்தியாலயத்தில் சேர்ந்த விசாலி, கொஞ்சநாட்களுக்குப் பிறகு அதே பிரசன்ன வதனமுடன் பிரசன்னமாவதில்லை. இதை எளிதில் கவனித்தேன். 'பாவம், சிறுமி! பிரிவு உணராமல் எப்படியிருப்பாள்?' என்று நினைத்துக்கொள்வேன் தேய்பிறை போலக் குன்றி வந்த அவள் முகப்பொலிவு நாளடைவிலே, இயற்கையின் போக்கிலே, வளர்பிறையாக மாறி வளரும் என்று மனசு ஆற்றிக்கொண்டேன். ஆனால் வளர்பிறையாக வளர்ந்தது அவளுடைய பொலிவின்மைதான். ஊரிலிருந்து வந்தபொழுது அழகே அச்சாய், உற்சாகமே உருவாய் அறிவுக்களை வீசிக்கொண்டிருந்த அந்த முகம் எங்கே? வித்தியாலயத்தின் சட்டதிட்டங்களுக்கிடையே சுருங்கின சரிகை போலக் காட்சியளித்த இந்தப் பெண் எங்கே?

சாரதாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டேன். "பெண்ணை வந்து பார்த்துவிட்டுப்போ! இல்லாவிட்டால் அவள் மனசு தேறாது! உடம்பு மாறாது! படிப்பு ஏறாது!" என்று எழுதிப்போட்டேன். ஓடியாடித் திரிந்தவாறே, கல்வியறிவூட்டும் புத்தகங்களைப் படித்து, மகாபாரதக் குட்டிக் கதைகளை எல்லாம் சொல்லும் சக்தியைப் பெற்றிருந்த விசாலி, இந்த விசாலியைவிட என்ன குறைந்து போயிருந்தாள்? மனச் சுணக்கம், மனப்பக்குவம், குன்றியிருந்தாள் போலும்! மனப்பக்குவம் வேண்டியது - ஆனால் அதற்கும் ஒரு வயசு, வரையறை இல்லையோ?

சாரதா வந்தாள். அவளுக்கு மட்டும் தெரியவில்லையா பெண்ணின் நிலைமை? வந்தாள், தன் எட்டு வயதுப் பையனுடன்; பெண்ணைப் பார்த்து அங்கலாய்த்தாள். அவளைத் தேற்றி ஆறுதல் மொழிகள் பல புகன்றாள்.

"அப்படியானால் அவளை அழைத்துப் போகும் உத்தேசம் இல்லையா!" எனக்கேட்டேன்.

அவள் இல்லையென்று ஒப்புக்கொண்டதும், என்னிடமேனும் விட்டுவைக்கும்படி மன்றாடினேன். ஆனால் அவள் அப்படியெல்லாம் செய்யவில்லை. செய்ய வேண்டியது என்ன என்று தீர்மானித்தே இருந்தாள். தான் அழைத்து வந்திருந்த பிள்ளையை இதே ஊரில் ஒரு கலைக்கூடத்திலே, ஒரு கல்விக் கிடங்கிலே சேர்த்துவிட்டாள். எப்படியும் அவனையும் சேர்க்கணுமாம்; ஒரே ஊரிலிருப்பதால் அப்படியொன்றும் இருவரும் ஏங்கிவிட மாட்டார்களாம்; ஒருவருக்கொருவர் ஆறுதலாயிருப்பார்களாம்.

சாரதா ஊர் திரும்பிப்போய் வருஷம் ஒன்றாயிற்று. பெண்ணை இரண்டு வருஷம் வித்தியாலயத்தில் விட்டுவைத்தாச்சு. பிள்ளையையும் ஒரு வருஷம் விட்டுவைத்துவிட்டாள். சாரதாவின் வைராக்கியம் நிரம்பிய உள்ளத்தை எண்ணி நான் என் மனதை வைரமாக்கிக்கொண்டேன். ஆனால் சில சமயம், வைரம் பாய்ந்த மனம் படைத்துவிட்ட குழந்தைகள் இருவரும் என்னைக் கலங்கத்தான் வைத்தார்கள். அவர்களுடைய இளம் உள்ளங்கள் கொண்ட மாறுதல் என் மனதை அறுத்தது. இந்த நிலையிலே கடவுளுக்கே பொறுக்கவில்லைபோலும். ஒரு மாறுதல் நிகழ்ந்தது; சாரதாவின் கணவருக்கு இதே பட்டணத்துக்கு வேலை மாற்றலாகிவிட்டது!

இந்தச் செய்திகேட்டுக் குழந்தைகள் குஷிப்பட்டதாகத் தெரியவில்லை விசாலி சலனமற்றவளாய் இருந்தாள். அவள் தம்பியும் நான்பட்ட அளவு சந்தோஷம்பட்டதாகத் தோன்றவில்லை. அவர்கள் உள்ளம்தான் ஒடுங்கிக் கிடந்ததே!

சாரதா இங்கேயே வந்துவிடப் போகிறாள் என்றதும் நான் கரைகாணாத ஆறுதலும் களிப்புங் கொண்டேன். ஆனால் அவள் வந்த பிறகு என்னுள்ளம் விள்ளல் விள்ளலாகிவிடும் போலாகிவிட்டது.

"நாங்கள் இதே ஊரில் இருந்தால்தான் என்ன? குழந்தைகள் அங்கேயே இருக்கட்டுமே!" என்றாள் சாரதா. என்னை வேடிக்கை செய்யத்தான் சொல்கிறாளாக்கும் என்று முதலிலே எண்ணினேன். ஆனால் பிறகு என் அஞ்ஞானத்தைத்தான் நொந்தேன்.

"உம்! அஞ்ஞானமில்லாத மனசு உனக்கு! குழந்தை, பாசம், என்றெல்லாம் அஞ்ஞானம் இல்லை உனக்கு!" என்று நான் சொல்லிவிட்டேன். எனக்குக் கோபம் பொங்கி வந்தது. ஆனால் அவளுடைய விசித்திரமான மனப்போக்குப் பற்றி சிந்தனை செய்ததும் சிறிது பதங்கொண்டது உள்ளம்.

"சாரதா! விசாலியைக் காலேஜில் படிக்க வைக்கணும், ஹாஸ்டல் வாழ்க்கையிலே விடணும், தூரதேசம் சீமை, ஐரோப்பா அனுப்பணும், என்றெல்லாம் திட்டம் போட்டிருக்காயா? அதற்கெல்லாம்தானா இந்த முயற்சி?" என வினவினேன். இருக்கலாமல்லவா? செல்வமும் செல்வாக்கும் உள்ள அவர்கள் இதுபோன்ற திட்டம் வகுப்பது இயல்புதானே?

"குடித்தனத்துக்கு அவளைத் தயார் செய்யணுமென்றால், விட்டிலேயே அல்லவா வைத்திருந்து வளர்க்கணும்!" என்று சிரித்தேன் நான். என் சிரிப்பு அவளுக்கு என்ன வேதனை மூட்டிற்றோ! கண்களில் நீர் கசிந்தது அவளுக்கு.

"ஆம் நிஜந்தான்! ஆனால், கமலா, என் மனதிலே மட்டும் ஏனோ முதலிலிருந்தே, என் பெண்ணை இது மாதிரி விட்டு வைத்திருந்து வளர்க்கவே திட்டம் உருவாகிவந்துவிட்டது! அந்த நாளிலேயே இந்தத் தீர்மானம் எனக்கு! இப்போ எனக்கு மட்டும் விசாலியைப் பார்த்தால் உறுத்தவில்லையா? என்னிடம் இருந்திருந்தால் இந்த வசந்தகால வயசுக்கு அவள் அழகுப் பிம்பமாய்த்தான் இருந்திருப்பாள்! . . . ஆனால் என்ன செய்ய? . . .பெண்களுக்கு பிறந்தகப் பாசம் கூடாது! . . . சீக்கிரம் இவளுக்குக் கல்யாணம் செய்து, இளம் மனதை நேராகப் புருஷன் பக்கமும், புருஷன் விட்டார் பக்கமும் திருப்பிவிடத்தான் யோசனை! உறவுக்கு வீங்கிப்போன உள்ளத்தை அவர்கள்பால் திருப்பிவிட்டால் அவர்களிடையே ஒட்டுதல் அதிகம் இருக்கும். பிறந்தகப்பாசம் பாதிக்காது அல்லவா?" என்றாள் சாரதா.

பெண்மனம் புதிர்தான். அவளுடைய கடந்த வாழ்க்கையிலே ஏதோ ஒரு பகுதிதான் சாரதாவின் இந்த விந்தையுணர்ச்சிகளுக்குக் காரணம் என்று நான் ஊகித்துக் கொண்டுவிட்டேன். அவளே சொல்லாதபொழுது வற்புறுத்திக் கேட்க நான் விரும்பாவிட்டாலும், அவள் மீது கனிவு ஏற்பட்டது.

"நன்னாருக்கு உன் யோசனை! உம், அது போகட்டும், மணம் செய்விப்பதற்கு முன்பாவது கொஞ்சகாலம் உன்னுடன் பெண்ணை வைத்துக் கொள்வாயோ? அதுவுமில்லையோ?" என்று கேட்டேன்.

சோகப் புன்னகையொன்று புரிந்தவாறே, 'உம், அது செய்வேன். வரன் என்று கிடைத்து ஏற்பாடு ஆகட்டும். அவளை என்னிடம் ஆறுமாதம் வைத்துக்கொண்டுவிட்டுப் புக்ககம் அனுப்புகிறேன்' என்றாள் சாரதா.

எனக்கு மலைப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தது அவள் பேச்சு. என்னமோ யோசனைகள் செய்து தன்னையும் குழந்தையையும் பிரித்துக்கொண்டுவிட்டாளே! இந்த நாளிலே புக்ககமாவது பிறந்தகமாகவது! புருஷனுக்கு வேலை கிடைத்து எங்கேயோ இருந்துவிடுகிறார்களே! அதுவும் பெரிய இடங்களிலே . . .

இனி என் பொறுப்பென்ன? ஒன்றுமில்லை. சாரதா தூரதேசத்தில் இருந்தாளேயென்று செய்ய வேண்டியது செய்தாச்சு; சொல்ல வேண்டியன சொல்லியாச்சு;கேட்கவேண்டியன கேட்டாச்சு. அவளோ வந்துவிட்டாள். இதே ஊருக்கு. ஏதோ விசித்திரப் போக்கிலே சுருண்டு கிடக்கிறது - அல்ல, பரந்து கிடக்கிறது - சாரதாவின் பாசம், அன்பு, எல்லாம். இனி அவள் பாடு, அவள் பெண்பாடு.

இந்தப் போக்கிலே நான் இருந்தேன் எனினும் அவர்கள் விஷயத்திலே புகத்தான் புகுந்தேன்; புகும்படியாச்சு.

முன்னம் எனக்குப் பரிச்சயம் இருந்த செல்வக் குடும்பம் ஒன்று உண்டு. அவர்களை, அந்தக் குடும்பத்தை, நான் மீண்டும் சந்திக்க நேர்ந்தது விதியின் விந்தை விருப்பம்தான்.

அவர்களுக்கு இரண்டே பிள்ளைகள். இளையவனை அவர்கள் தங்கள் கிட்டிய பந்துக்களிடமேவிட்டு வைத்துவிட்டார்கள் சிறு வயசு முதலே. கல்வி புகட்டும் நோக்கத்துடனேதான். சிறு வயதிலும் பெற்றோரிடம் இருந்ததில்லை, அந்தப் பையன். வயது வந்தபின்பும் கல்லூரிப்படிப்பு, டிரெயினிங் என்றெல்லாம் ஏற்பட்டதால் பெற்றோரிடமே அதிகம் இருக்கவில்லை.

இந்தத் தகவல்களெல்லாம் என் மூளையிலே புரண்டன. சாரதாவுடன் ஏற்பட்ட தொடர்பிலேயிருந்து கிளம்பின யோசனைகளும் இந்தத் தகவல்களினால் எழுந்த யோசனைகளும் பின்னி இணைந்தன. சாரதா எனக்குக் கொடுத்துவிட்ட உரிமை முடிபோட்டுவிட்டது.

"வரன் இருந்தால் சொல்லு!" என்றாளல்லவா, பெண்ணைப் பெற்ற தாய்க்கே உரிமையான கவலையுடன்! இந்தப் பையனின் கையைப் பிடிப்பதே உசிதம். சாரதா பயந்தபடியொன்றும் நடந்துவிடாது, விசாலி இந்தப் பையனை மணந்தால்! பிள்ளை மீது பாசம் ஒட்டுதலை இவற்றால் அல்லவா மாமியாருக்கு மருமகளிடம் மனக்கசப்பு? மருமகளுக்கு மனவேற்றுமை? பெற்ற பாசம், வளர்த்த பாசம் இரண்டும் சேர்ந்த மிதமிஞ்சிய பாசம் இருந்தாலல்லவா வம்புதும்பு? இந்த பிள்ளையிடம் பெற்றோருக்கு பெற்ற பாரம்தானே இருக்கும்! அன்புக்கு ஏங்கியிருக்கக்கூடிய இந்தப் பெண்ணும் பையனும் மணந்தால் கைப்பற்றியதுமே மனமொன்றிப் போன தம்பதிகளாகிவிடுவர். விசாலி இந்தக் கணவனுடன் இன்பமாய் இருப்பாள். இந்த யோசனையுடனே வேலை துவக்கினேன். எல்லாம் நான் நினைத்ததைவிடச் சீக்கிரமாக நடந்தது. ஜாதகம் பார்த்தது, சீர் வரிசைப் பேச்சுப் பேசினது, எல்லாம் ஒரு அம்சமும் குறையாமல் நடந்தும், இந்த விஷயத்திலும் ஒரு குந்தகமும் இல்லை. இதே திருமணம் நிச்சயமாயிற்று. தன் வாக்குப்படியே சாரதா விசாலியைத் தன்னிடம் கொணர்ந்துகொண்டாள், கலியாணத்திற்கு ஆறுமாசம் இருக்கும்போது, பதினைந்து வயது நிரம்பாத விசாலி தன் அன்னையின் வீடு வந்தாள். அவளால் அவளுடைய தம்பிக்கும் விடுதலை கிடைத்துவிட்டது.

அந்த ஆறுமாதகாலத்திலே சாரதாவை_யும் விசாலியையும் சேர்ந்தாற்போல அடிக்கடி பார்த்தேன். அதிலே ஒருவாறு திருப்தி கொண்டேன். ஒரு குறையில்லாமற் பயும் போகவில்லை. ஆண்டிலும் அறிவிலும் சிறியவளான இந்தப் பதினைந்து வயசுப் பெண் தாயிடம் எப்படியிருக்கிறாள்? இந்தப் பெண்ணிடம் சாரதா எப்படியிருக்கிறாள்? ஆஹா! இயற்கையாக இருக்க வேண்டிய மனநெகிழ்ச்சியும், குழைவும், சிறு சிறு மனவேற்றுமைகளும் எங்கே? காணோமே? ஆனால் இந்தக் குறைக்கு ஒரு நிறைவைக் கொடுத்துவிட்டது, என்னால் ஏற்பாடாகியிருக்கும் விசாலியின் விவாகம்.

விசாலிக்கு வயசு அதிகமாகிவிடவில்லையே! அதனாலே அவளை ஒரு வருஷம் கழித்து அழைத்துக்கொள்வதாக அவளுடைய புக்ககத்தார் சொன்னார்கள். அது நியாயமாகவும் திருப்தியாகவுந்தான்பட்டது எங்களுக்கு.

"இதுவும் தேவலை சாரதா! நீயும் ஒருவருஷம் உன் பெண்ணோடு இருக்கலாமே!" என்றேன் நான்.

"ஆம்! நிஜந்தான்! ஆறுமாதத்திலே செழித்திருக்கும் விசாலியின் உடம்பு. இன்னும் நன்றாக அழகு கூடும்!" என்று ஒப்பினாள் சாரதா. அவள் கணவர்கூட ரொம்ப திருப்திப்பட்டாராம். இத்தனைகாலம் பிரிந்திருந்தும் தாரை வார்த்துக் தரும்பொழுது கண்ணீர்விட்டவரல்லவா?

ஒரு வருஷமாயிற்று. மேலே கூட சில மாதம் ஆயிற்று. நடுவிலே தீபாவளி, ஆடி, என்று ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலே விசாலிக்கும் அவள் கணவனுக்கும் பழக்கம் ஏற்பட்டாலும், அவர்களிருவருடைய உள்ளங்களிலும் அன்புப் பெருக்கு, காதற் துடிப்பு இருப்பதாகப் புலப்படவில்லை! அவளை அழைத்துக் கொள்ள அவர் அவசரப்படுவதாகக் காணவில்லை. அவருடன் போயிருக்க அவள், அடங்கா ஆவலுள்ளவளாய் இருக்கிறாள் என்றும் சொல்ல முடியாமலிருந்தது.

"அன்பை அடக்கி வைத்துக்கொள்ளப் பழகியவர்கள்!" இதுதான் நாங்கள் கண்ட சமாதானம்.

எனினும் நான் ஒருத்தி மட்டும் சற்று பரபரப்புக் கொண்டேன்; என் மனதிலே ஒரு கவலை.

இந்த ஒன்றரை வருஷத்திலே பெண் மீதுள்ள பாசம் இறுகியிருந்ததனாலே, அவள் புக்ககம் போகணுமென்பதிலே அவசரத்திற்கு அவசியமென்ன என்று நினைக்கும் தோரணையிலே விசாலியின் பெற்றோர் இருந்தார்கள். அழைப்பு வரட்டுமே என்று இருந்த அவர்களை நான் தூண்டிவிட்டேன். கடைசியில், இயற்கையாக உள்ள சிறு ஆவலினாலும், செயற்கையாக என் மூலமாகக் கிளர்ந்தெழுந்த ஒரு கவலையினாலும், சாரதாவும் அவள் கணவரும் சம்பந்திகளை விசாரித்தார்கள்.

"இன்னும் ஆறு மாதமோ, ஒரு வருஷமோ போகட்டுமே! அப்புறம் வரட்டும்! பிள்ளையுடன் நாங்கள் இத்தனை நாள் இருந்ததில்லையே! அவனுக்கும் ஒரு உத்தியோகம் என்று ஆகட்டுமே!" என்னும் மறுமொழி வந்தது!

"எங்களிடையே அன்பு கொஞ்ச நாளைக்குப் பிளவுபடாமலிருக்கட்டுமே!" என்று அவர்கள் நினைக்கிறார்களோ? 'பிள்ளையகத்தாருக்கே உரிமையான தோரணையிலே ஏதாவது இதுபோல நினைப்பார்களோ? எழுதுவார்களோ?' என்று நான் அஞ்சினது வீண்போகவில்லை! பளிச்சென்று அவர்கள் சொல்லாவிட்டாலும் இதுதான் அவர்கள் கருத்து என்று ஏனோ என் மனம் துணுக்குற்றது.

எத்தனையோ வகை சமாதானம் தேடிக்கொண்டேன். 'அவர்கள் அப்படி நினைத்தாலும் நியாயந்தானே? இயல்பு தானே? சாரதாவைப் போல அவர்களும் கொஞ்ச நாள் பிள்ளையுடன் இருக்கட்டும்! தவறென்ன? மேலும் அவர்கள் தற்கால நியாயத்தையொட்டி, தற்கால இளந்தம்பதிகளைத் தனிக்குடித்தனம் வைக்கும் வழக்கத்தையொட்டிப் பேசுகிறார்கள் போலும்! அதுதான் வேலையாகட்டுமே என்கிறார்களோ? 'பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் சேர்ந்தாற்போல வைத்துக்கொள்ள வேண்டும், கொஞ்ச நாளைக்கு,' என்று ஆசைப்படுபவர்கள் பிள்ளையுடன் பழகிப்பாசம் வைத்துவிட்டவர்கள் தான்!" என்ற ஒரு உண்மை உணர்ந்து கொண்ட ஆறுதல் பெற்றேன்! நான் எதிர்பார்த்ததுபோலவே, சாரதாவின் அந்தரங்கம் விரும்பினதைப் போலவே விசாலி, விரைவிலே கணவனுடன், ஒரு தொல்லையுமின்றி, ஹாய்யாக இன்ப வாழ்வு நடத்தப்போகிறாள்! ஐயமில்லை!

அதுவரை விசாலியுந்தான் பெற்றோருடன் இருக்கட்டுமே! அப்புறந்தான் இருக்கவே இருக்கிறதே பிரிவு? இதை நான் சாரதாவுக்குச் சொன்னபொழுது அவளும் விழுந்து விழுந்து சிரித்தாள் என்னுடனே. அன்றொரு நாள் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டதை நினைத்துத்தான்!

அந்தப்பிரிவு நாளும் வந்தது. விசாலியின் கணவருக்கு வடக்கே ஒரு நல்ல வேலை கிடைத்துவிட்டது. விசாலியைக் கொணர்ந்து விடணுமென்ற கடிதம் 'டாண்' என்று வந்துவிட்டது. சாரதாவுக்கு மகிழ்ச்சிக்கு நடுவே பிரிவுத்தாபம். எனக்கும் பிரிவுத்தாபத்துக்கிடையே பெருமை. விசாலி ஹாய்யாக இருப்பாள் அல்லவா? அன்பே உருவான கணவனுடன் ஆனந்த வாழ்வு நடத்தப் போகிறாள் அன்றோ?

பிள்ளையிடம் நாட்டுப் பெண்ணைச் சேர்ப்பிக்க விசாலியின் மாமனார் மாமியார்தான் போனார்கள். விசாலியின் மாமனாருக்குப் பொறுப்புள்ள உத்தியோகம், அவர் இருக்குமிடத்திலே . . . எனினும் அவர் பல அவசர ஜோலிகளைப் போட்டுவிட்டு, லீவு

எடுத்துக்கொண்டு, மனைவியுடன் போனார் அவர்களுடைய சிறு குடித்தனத்தை நிறுவிக்கொடுத்துவிட்டு வர. கொஞ்ச நாள் இருந்துவிட்டு வந்துவிடத்தான் போனார்.

ஆனால்? . . . ஆனால்? . . .ஆனால்?. . .

ஆனால் அவர் அங்கிருந்து வரவில்லை; வர இஷ்டப்படவில்லை. மனைவியுடன் அங்கேயே தங்கிவிட்டார். தம்முடைய வேலையை மாற்றிக் கொண்டு, ஊரையும் மாற்றிக் கொண்டு, எங்களையும் ஏமாற்றிவிட்டு, அங்கேயே இருந்துவிட்டார். அந்தப் பிள்ளையை விட்டு வர மனமில்லையாம் பெற்றோர்க்கு! நாங்கள் இதற்கு வருந்துவது தவறுதான். ஆனால் என் மனசு வேதனைபடத்தான்பட்டது.

"இத்தனை நாள், இத்தனை வருஷம் உங்களுக்குப் பிள்ளையாக இருந்தேனே? இனி இந்த இளம் பெண்ணுக்கு நான் அன்புக் கணவனாக இருக்கவேண்டாமோ?" என்று நினைக்கவோ கேட்கவோ தோன்றாதபடி வளர்ந்துவிட்ட ஒரு பிள்ளையை விசாலியின் கணவனாக்க நான் காரணமானேன். நான் செய்த கற்பனை என்ன? நடந்தது என்ன?

பல வருஷங்கள் பெற்றோரைப் பிரிந்துவிட்டு அவர்களைச் சேர்ந்து கொண்டபின் "ஆஹா! அம்மாவின் அன்புதான் அன்பு! அப்பாவின் ஆசைதான் ஆசை!" என்று தீர்மானங்கொண்டுவிட்ட பிள்ளை, பெற்றோர் பயந்த பீதியிலுங்கூட நியாயங்கண்டுவிட்டது! அன்பு பிளவுபட்டால் பெற்றோர் மனம் நோவார்கள்? இந்த மனப்போக்குடனே மனைவியை ஆளுகிறான்! பெண் மனம் விரும்பும் தீவிரமுள்ள அன்பு அவனிடம் இல்லை; கணவன் தன்மை இல்லை.

இதையுணர்ந்து நான் உள்ளங்குமைகிறேன். ஆனால் எனக்கு ஆறுதலளிப்பவள், சாரதாதான். முன்னம் எனக்கு வேதனையளித்த அவளுடைய அதே விந்தை மனப்போக்குத்தான் இன்று என்வேதனையைத் தணிக்கிறது.

"நீயும் நானும் என்ன கண்டோம், கமலா? விசாலியும் அவள் புருஷனும் சிறுவயதிலே ஒரே நிலையிலிருந்தவர்கள். ஆனால் அவர் எப்படி நினைக்கிறார்? இவள் எப்படி நினைக்கிறாள், பாரேன்! எது எப்படியாகுமென்று யார் சொல்லமுடியும்?" என்கிறாள் சாரதா. விசாலி என்ன நினைக்கிறாள்? சிறுவயசிலேயே பாலயோகினியாகத் திகழ்ந்த விசாலி இடைக்காலத்திலே பெற்றோரின் அன்புப் பெருக்கிலே திளைத்திருந்தும், இப்போது கணவன் வீட்டிலே ஏற்பட்டுவிட்ட அன்புக்குறைவைப் பொருட்படுத்தவில்லை. 'முந்தி எப்படியிருந்தாள் அம்மா?' என்னும் அவள் எண்ணப்போக்கு, அவளுடைய கணவனையும் கணவனை ஆட்சிசெலுத்தும் பெற்றோரையும்தான் தாங்குகிறது, தன்னைத் தாழ்த்துகிறது என்று சாரதா அறிகிறாள். பெண்மீது சாரதாவுக்கும் அன்பு வட்டியும் முதலுமாகச் சேர்ந்துவிட்டாலும், சாரதா நினைப்பது சிறப்பு வாய்ந்தது.

"விசாலி பெண். அவள் நினைப்பது சரி, அவள் கணவர் ஆண் நினைப்பதும் சரி, நாம் நினைப்பதுதான் தப்பு! என்று சொல்கிறாள் சாரதா!

**********

(சுதேசமித்திரன், ஆகஸ்ட் 28, 1949)